2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. சண்முகவேலு

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி எட்டாவது அறிக்கையை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஐந்தாவது முதல் நூற்று நாற்பத்தி ஒன்றாவது வரையிலான 7 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்படவேண்டும். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வது குறித்தும்;

2. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி தொழிற்சாலை தனியாருக்கு விற்கப்படுவதை தடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது குறித்தும்;